## நாமக்கல்லில் லாரிகளை நிறுத்தி வைப்பதற்கு 'பார்க்கிங் யார்டு' அமைத்திட வேண்டும்!

# ரூ.540 கோடியில் மோகனூர் கூட்டுக்குடிநீர் திட்டம் அறிவித்த முதல்வருக்கு நன்றி!

## சட்டப்பேரவையில் நாமக்கல் தொகுதி உறுப்பினர் பெ.இராமலிங்கம் பேச்சு!

**சென்னை, மார்ச் 28-**

**சட்டப்பேரவையில் ஊரக வளர்ச்சித் துறை மானியத்தில் நாமக்கல் தொகுதி உறுப்பினர் பெ.ராமலிங்கம் பேசுகையில் நாமக்கல் மோகனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அறிவித்த முதல்வருக்கு நன்றி என்று குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில் நாமக்கல் பெ. இராமலிங்கம் பேசியதாவது:-

தமிழ்நாட்டின் நவீன சிற்பி, இந்நூற்றாண்டின் ஈடில்லாத் தலைவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் துயில் கொண்டிருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.

ஊரக வளர்ச்சியில் உயர்வைக் கொடுத்த உத்தமராய், உள்ளாட்சியில் நல்லாட்சி கொடுத்த நம்பிக்கையின் நாயகராய், பெற்றோரை இழந்து தவிக்கும் குழந்தைகளின் தாயுமானவராய், திராவிடத்தால் இந்தியாவிற்கே விடியலைக் கொடுத்த உதயசூரியனாய் விளங்கும் முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கம்.

**திராவிடத்தின் இளந் தலைவர்!**

எட்டுத்திக்கும் ஒளி வீசும் இளஞ்சூரியனே, செம்மொழி பெற்ற செந்தமிழ் நாட்டின் செல்லப்பிள்ளையே, தொன்மை வாய்ந்த திராவிடத்தின் இளந்தலைவரே, துணை முதலமைச்சர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கம். அவை முன்னவர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அரசுக் கொறடா அவர்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், எனக்கு இந்த வாய்ப்பை வழங்கிய நாமக்கல் சட்டமன்றத் தொகுதி மக்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முதலமைச்சர் அவர்கள், 22-10-2024 அன்று நாமக்கலில் நடைபெற்ற அரசு விழாவில் புதுச்சத்திரம் ஒன்றியம் அருள்மிகு நைனாமலை வரதராஜப் பெருமாள் திருக்கோயிலுக்கு மலைப்பாதை அமைப்பதற்கு ரூ.30 கோடியும், நாமக்கல் மாநகராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.10 கோடியும், சேலம் மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் உள்ள ethanol பிரிவை மேம்படுத்த ரூ. 6 ¾ கோடியும் வழங்கியதற்கு எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2025- 2026 ஆம் ஆண்டு நீர்வளத் துறை நிதிநிலை அறிக்கையில் நாமக்கல்மோகனூர் ஒன்றியம், ஆண்டாபுரம் கிராம மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறை வேற்றுகின்ற வகையில் நீர்வளத் துறையின் மூலமாக ரூபாய் 3.68 கோடி மதிப்பீட்டில் கரை பொட்டனாற்றின் குறுக்கே பாலம் அமைக்க அறிவித்தமைக்கு முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாக எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**நகராட்சி துறை ஆக்கிய ரூ.540 கோடி**

அதேபோல 2025-2026 ஆம் ஆண்டு நகராட்சித் துறை மானியக் கோரிக்கையில் நாமக்கல் மற்றும் மோகனூர் ஒன்றியங்களுக்கு ரூபாய் 540 கோடி மதிப்பீட்டில் நாமக்கல்மோகனூர் கூட்டுக்குடிநீர் திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்தமைக்கு முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், நகராட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் அனைத்துத்தர மக்களும் பயனளிக்கின்ற வகையிலே அவர்களுடைய வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வகையிலும் தொலைநோக்குப் பார்வையுடன் பல புதுமையானத் திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது. ஊரக வளர்ச்சி துறையிமூலம் திறம்படத் திட்டங்களை செயல்படுத்தி வருவதில், நாட்டின் முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு தொடர்ந்து முன்னிலையில் இருந்து வருகிறது.

**கலைஞர் கனவு இல்லம் மூலம் இலட்சம் வீடுகள்!**

நிதிநிலை அறிக்கையிலே குடிசையில்லா தமிழ்நாடு அமைந்திட வேண்டும் என்ற முத்தமிழறிஞர் கலைஞரின் பெருங்கனவை நினைவுகூரும் வகையில் கலைஞர் கனவு இல்லம் அறிமுகப்படுத்தப்பட்டு, 2030 ஆம் ஆண்டிற்குள் 8 இலட்சம் concrete வீடுகள் ஊராட்சி பகுதிகளில் கட்டி தரும் நோக்கத்துடன் சென்ற ஆண்டு தொடங்கப்பட்டு, ஓர் இலட்சம் புதிய வீடுகள் கட்டும் பணிகளை அனைத்து மாவட்டங்களிலும் விரைந்து நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டில் ஓர் இலட்சம் வீடுகள் ரூபாய் 3,500 கோடி மதிப்பீட்டில் கட்டித்தரப்படும் என்பது வரவேற்கத்தக்கது. கலைஞர் கனவு இல்லத் திட்டத்தின் மூலமாக 2024-2025 ஆம் ஆண்டு நிதியாண்டில் எனது நாமக்கல் மாவட்டத்தில் மட்டும் 5,800 பயனாளிகளுக்கு சுமார் 17,950 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இன்று வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழ்நாட்டில் கடைக்கோடி குக்கிராமங்களும் சாலை வசதிகள் பெறவேண்டும் என்ற நோக்கில் முதல்வரின் கிராம சாலைகள் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் இந்த ஆண்டு 6,100 கிலோ மீட்டர் நீளமுள்ள கிராமச் சாலைகள் 2,200 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்பது வரவேற்கத்தக்கது.

அதேபோல என்னுடைய நாமக்கல் மாவட்டத்தில் முதலமைச்சர் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் சுமார் 2,497.30 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 42 சாலைப் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது என்பதையும், தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழ்நாட்டில் கடந்த 2021 ஆம் ஆண்டிற்கு முன்னர் பல்வேறு அரசு திட்டங்களின்கீழ் ஊரக பகுதிகளில் வாழும் விளிம்புநிலை மக்களுக்காக கட்டப்பட்டு, தற்போது சீரமைக்க முடியாமல் மிகவும் பழுதடைந்த வீடுகளுக்கு மாற்றாக, 25 ஆயிரம் புதிய வீடுகள் 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தரப்படும் என்ற அறிவிப்பு வரவேற்கத்தக்கது. தமிழ்நாட்டின் அனைத்து குக்கிராமங்களும் தன்னிறைவு பெற்றிடும் வகையில் 20252026 ஆம் ஆண்டில் அண்ணா மறுமலர்ச்சி திட்டம் IIன்கீழ் 2,329 கிராம ஊராட்சிகளில் 1,081 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பது வரவேற்கத்தக்கது.

**அண்ணா மறுமலர்ச்சி திட்டம்.**

அனைத்து குக்கிராமங்களும் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியினை முழுமையாக அடைவதை உறுதி செய்யும் பொருட்டு, தற்போது அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் II, மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் 2021-2022 ஆம் ஆண்டு முதல் 2025-2026 ஆம் ஆண்டு முடிய ஐந்து ஆண்டுகளில் அனைத்து கிராமங்களிலும் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் தமிழ்நாட்டில் சிறப்பாக அனைத்து கிராமங்களிலும் செயல்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**முதல்வரின் கிராம சாலை திட்டம்**

முதலமைச்சர் அவர்கள் 13 -1-2023 அன்று சட்டப்பேரவையில் ஆளுநர் உரையின் மீதான விவாதத்திற்கு பதிலளித்தபோது, 'முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்' என்ற புதிய திட்டத்தை அரசு செயல்படுத்தும் என்றும், இரண்டு ஆண்டுகளில் 10,000 கிலோ மீட்டர் நீளமுள்ள ஊராட்சி ஒன்றிய சாலைகளை ரூபாய் 4,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என்று அறிவித்தார்கள்.



ஊராட்சி ஒன்றியம் மற்றும் கிராம ஊராட்சி சாலைகளை மேம்படுத்துதல், வலுப்படுத்துதல், பராமரித்தல், முதல்வரின் கிராமச் சாலைகளின் மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கமாகும். மேலும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் பெரியார் நினைவு சமத்துவபுரங்கள், பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், அரசு திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட ஊரக வீடுகளை சீரமைத்தல் உள்ளிட்ட எண்ணற்றப் பணிகள் சிறப்பாக நடைப்பெற்று கொண்டு வருகிறது.

பழுதடைந்த வீடுகளை சீரமைக்கும் திட்டத்தின் மூலமாக என்னுடைய நாமக்கல் மாவட்டத்தில் மட்டும் 2258 சிறு பழுது வீடுகளும் மற்றும் 2764 பெரு பழுது வீடுகளும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, இன்று பழுது நீக்கம் செய்யப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் 2001 ஆம் ஆண்டுக்கு முன்பாக, பல்வேறு அரசுத் திட்டங்களின்கீழ் ஏறத்தாழ 2.50 இலட்சம் வீடுகள் கட்டப்பட்டன. கிராமப்புற விளிம்பு நிலை மக்களுக்காக கட்டப்பட்ட அந்த வீடுகள் ரூ.2,000 கோடியில் அடுத்த இரண்டு ஆண்டுகளில் பழுது பார்க்கப்படும், புனரமைக்கப்படும் என்பது மிகவும் வரவேற்கத்தக்கது. மகாத்மா காந்தி தேசிய வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் செயலாக்கத்தில் 2021 முதல் 2025 வரை 4 ஆண்டுகளில், தேசிய அளவில் 14 இனங்களில் நமது தமிழ்நாடு அரசு முதலிடம் பெற்றிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், கிராம ஊராட்சிகளில் பணிபுரிகின்ற மக்கள் நல பணியாளர்களிடம் சம்பளம் வழங்க வேண்டும் என்கிற கோரிக்கை இருக்கிறது. அதனை நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

**மகளிர் சுய உதவிக் குழுக்கள்!**

மகளிர் திட்டம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 36 ஆண்டுகளுக்கு முன்னர் தொலைநோக்குடன் விதைக்கப்பட்ட சுய உதவிக்குழு திட்டத்தின்மூலம் தற்போது 4.76 இலட்சம் மகளிர் திட்ட சுய உதவிக்குழுக்கள் இயங்குகின்றன. சுய உதவிக்குழுவில் இதுவரை இணைந்திடாத மகளிர் மற்றும் விளிம்புநிலை வாழ் குடும்ப உறுப்பினர்களாகக் கொண்டு 10,000 புதிய சுய உதவிக்குழுக்கள் வரும் நிதியாண்டில் உருவாக்கப்படும் என்ற அறிவிப்பும், வரும் நிதியாண்டில் 37,000 கோடி ரூபாய் அளவிற்கு வங்கிக் கடன் வழங்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதும் மகளிரிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில் மட்டும், இந்த நான்கு ஆண்டுகளில் 42,193 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு 2,544 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல், சுழல் நிதியாக 800 குழுக்களுக்கு ரூ.1.2 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி ஆகிய இடங்களில், உதவிக்குழு பகுதி அளவிலான கூட்டமைப்புகள் ஆகியவை கூட்டம் நடத்துவதற்கென போதுமான கட்டட வசதி இல்லை. எனவே, அனைத்து நகர்ப்புற பகுதிகளிலும் சுய உதவிக்குழுக்களுக்கு கட்டடங்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊரகப் பகுதியில், வட்டார அளவில் வட்டார சேவை மையம் சில இடங்களில் இல்லாமல் உள்ளது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தில் இவற்றை கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மார்ச் 8 அன்று நடைபெற்ற உலக மகளிர் தின விழாவில், முதலமைச்சர் அவர்களால் மகளிர் சுய உதவிக்குழு பெண்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டது. இந்த அட்டைமூலம் அரசு போக்குவரத்து பேருந்துகளில் 25 கிலோ எடை சுமைகளை கட்டணமில்லாமல் எடுத்துச் செல்ல முடியம் என்ற சலுகையால் குழுவில் உள்ள பெண் விவசாயிகள், சுயதொழில் புரிவோர் பெரிதும் பயன்பெறுகின்றனர்.

மகளிர் உரிமைத்தொகை திட்டத்தில் தகுதியிருந்தும் பயன்பெற முடியாத மகளிர் மீண்டும் விண்ணப்பிக்கலாம் என்ற அறிவிப்பு தமிழக தாய்மார்களின் மத்தியில் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது.

எனது சட்டமன்றத் தொகுதி ஆதிதிராவிடர் அதிகம் வசிக்கும் கிராம ஊராட்சிகளை கொண்ட பகுதியாகும். அங்கு 30க்கும் மேற்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் புதியதாக அமைக்கவும் மற்றும் மிகவும் பழுதடைந்த சாலைகளை சீரமைக்க வேண்டுமென்றும் அமைச்சர் அவர்களிடத்தில் வைத்த கோரிக்கையை ஏற்று, அதை உடனடியாக நிறைவேற்றிக் கொடுத்த அமைச்சர் அவர்களுக்கும், துறைச் செயலாளர் அவர்களுக்கும் மற்றும் துறை ஆணையர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாமக்கல் நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தியமைக்கும், புதிய பேருந்து நிலையம் அமைத்ததற்கும், மாநகராட்சியில் இணைக்கப்பட்ட 9 ஊராட்சிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் வழங்கியதற்கும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் அறிவித்த, நாமக்கல்லில் பிரதானமாக லாரி தொழில் மற்றும் கோழிப்பண்ணைத் தொழில் உள்ளதால், லாரிகளை நிறுத்தி வைப்பதற்கு பார்க்கிங் யார்டு அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டும். நாமக்கல், மோகனூர் சாலையில் செயல்பட்டு வந்த மாவட்ட தலைமை அரசு மருத்துவமனை, மாவட்ட மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டு அந்த இடம் காலியாக உள்ளது. பொதுமக்கள் புதிய மருத்துவமனைக்குச் செல்ல நீண்ட தூரம் பயணிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளதால், காலியாக உள்ள அந்த இடத்தில் சிறிய அளவிலான தாலுக்கா மருத்துவமனை அமைக்க ஆவன செய்ய வேண்டும்.

நாமக்கல் மாவட்ட விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையான நாமக்கல் மாவட்டம், மோகனூர் மற்றும் கரூர் மாவட்டம், நெரூர் அடையே கதவணை அமைக்கும் திட்டத்தி ற்கு முதல் நிதியாண்டில் நீர்வளத் துறை மானியக் கோரிக்கையில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அத்திட்டத்தை இந்த ஆண்டே தொடங்கி செய்து கொடுக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களையும், நீர்வளத் துறை அமைச்சர் அவர்களையும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். நாமக்கல் புறவழிச்சாலை நான்காம் மற்றும் ஐந்தாம் கட்ட பணிகளுக்கு இந்த ஆண்டே நிதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**கால்நடை மருத்துவனை!**

நாமக்கல் திருச்சி சாலையில் அமைந்திருந்த கால்நடை மருத்துவமனை 10 கிலோ மீட்டர் தொலைவில் அணியாபுரத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட காரணத்தால், திருச்சி சாலையில் காலியாக உள்ள பழைய இடத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் அனைத்து மாநகராட்சிகளிலும் செயல்பட்டுவரும் பன்முக கால்நடை மருத்துவமனையை கொண்டுவர ஆவன செய்ய வேண்டுகிறேன்.

புதுச்சத்திரம் ஒன்றியம், நவணி ஊராட்சியை பேரூராட்சியாக தரம் உயர்த்திட வேண்டுகிறேன். நாமக்கல் மாவட்டம் புதுச்சத்திரம் போக்குவரத்து காவல் நிலையம் தற்போது நாமக்கல் காவல் நிலைய வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. தற்சமயம் அதனை புதுச்சத்திரம் காவல் நிலையத்தில் காலியாக உள்ள இடத்தில் கட்டடம் கட்ட வேண்டும்.

திருச்செங்கோடு சாலை Warehouse முதல் பொய்யேரிக் கரை சாலை வரை வெள்ள வாரி தெரு முதல் சேந்தமங்கலம் சாலை வரை மற்றும் அனுமான் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைத்திட வேண்டுகிறேன்.

**வீட்டு மனைப் பட்டா!**

நாமக்கல் தொகுதி மக்கள் வீட்டுமனை பட்டா வேண்டி மனு அளித்துள்ளனர். அவர்களுக்கு அதை வழங்க நிலம் கையகப்படுத்த வேண்டும். அதனால் நாமக்கல் தொகுதியில் சமத்துவபுரம் இல்லை. அதனைக் கொண்டு வந்தால் நிலமற்ற ஏழை மக்களுக்கு வீடு வழங்கலாம். ஆகவே, முதல்வர் அவர்கள் இதனை ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு வெல்லும் என்று கூறி, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த முதலமைச்சர் அவர்களுக்கும், தாங்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தொகுதி கோரிக்கைகள்:**

நாமக்கல் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 12 ஊராட்சி பகுதிகளுக்கு தினசரி 135 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கிட, தனியாக புதிய குடிநீர்த் திட்டம் ஒன்று செயல்படுத்திட வேண்டும்.

நாமக்கல் நகராட்சி, கொசவம்பட்டி ஏரியில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் புனரமைப்பு பணியினை முடிப்பதற்கு தேவையான நிதியினை இந்த ஆண்டு வழங்கி, பணிகளை விரைந்து முடிக்க வேண்டும்.

நாமக்கல் மாநகராட்சி, சேந்தமங்கலம் சாலையில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தி லிருந்து வெளியேற்றப்படும் நீரை மறுசுழற்சி செய்து வணிக மற்றும் தொழிற்சாலைகளின் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும்.

வீடு வேண்டி விண்ணப்பித்த பொருளாதாரத்தில் நலிவுற்ற பொதுமக்கள் 1000 பேருக்கு வீடு கட்டுவதற்குத் தேவையான நிலத்தை தேர்வு செய்து புதிய அடுக்குமாடி குடியிரு ப்பினை நாமக்கல்லில் அமைக்க வேண்டும்.

நாமக்கல்மோகனூர்ஒருவந்தூர் நீரேற்று பாசன கூட்டுறவு சங்கத்தின் பணி நிலை திறனில் பம்ப் ஆப்ரேட்டர், உதவி பம்ப் ஆப்ரேட்டர் போன்ற தொழில்நுட்ப பணியிடங்களை நிரப்ப வேண்டும்.

நாமக்கல் தொகுதி, புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், தத்தாத்திரிபுரம் ஊராட்சி, சரபங்கா ஆற்றின் குறுக்கே புதுச்சத்திரம்ஏளூர்வேலகவுண்டன் பட்டி சாலையில் உள்ள தரைப்பாலத்தில் பருவமழை காலங்களில் போக்குவரத்து தடைபடுவதால் நெடுஞ்சாலைத் துறைமூலம் உயர்மட்ட பாலம் அமைக்க வேண்டும்.

மோகனூர் சாலையில் அணியாபுரத்திலிருந்து புதுப்பாளை யம் செல்லும் சாலையையும், மோகனூரிலிருந்து வலையப்பட்டி செல்லும் சாலையையும் அகலப்படுத்தி, மேம்பாடு செய்ய வேண்டும்.

மோகனூர் நாமக்கல் சாலையில் இரயில்வே மேம்பாலத்தின் அணுகுசாலையை மேம்பாடு செய்து தர வேண்டும்.

வேலூர் முதல் மோகனூர் செல்லும் சாலையை கி.மீ. 12/8, 15/2, வரை அகலப்படுத்தி மேம்பாடு செய்து தர வேண்டும்.

நாமக்கல் துணை மின் நிலைய வளாகத்திற்குள் புதிய மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் கட்ட வேண்டும். நாமக்கல் மற்றும் மோகனூரில் புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டும்.

நாமக்கல் தொகுதி, வாடகை கட்டடத்தில் இயங்கி வருகின்ற 15 பகுதி நேர நியாய விலைக் கடைகளுக்கு கூட்டுறவுத் துறையின் மூலம் கட்டடங்கள் கட்டித்தர வேண்டும்.

அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும் கணினி பட்டப் படிப்பு பயின்ற கணினி ஆப்ரேட்டர் பணியிடத்தினை நிரந்தர பணியிடமாக உருவாக்க வேண்டும்.

கிராமப்புற நியாய விலை கடைகளில் 1,000 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள இடங்களில் ஒரே ஒரு விற்பனையாளர் மட்டுமே உள்ளதால், கூடுதலாக ஒரு கட்டுனர் நியமனம் செய்ய வேண்டும்.

நாமக்கல் தொகுதி, மோகனூரில் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டும். முதலைப்பட்டி புதிய பேருந்து நிலையம் பகுதியில் புதியதாக ஒரு காவல் நிலையம் அமைக்க வேண்டும்.

நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், ஒருவந்தூர் கிராமத்தில் காவிரி ஆற்றின் இடது கரையில் வெள்ளத்தடுப்பு சுவர் அமைக்க வேண்டும்.

மோகனூர் பகுதி விவசாயத்திற்கு அனைத்து காலங்களிலும் தங்குதடையின்றி பாசன வசதி பெறுவதற்கு, நாமக்கல் மாவட்டம், நஞ்சைபுகலூர் அனிச்சம்பாளையம் கதவணையில் 1 மீட்டர் உயரத்திற்கு பொருத்தப்ப ட்டுள்ள ஷட்டரின் உயரத்தைக் குறைக்க வேண்டும்.

நாமக்கல் அருகிலுள்ள சித்தர்மலைக்கு சாலை வசதி, மின் வசதி, பூங்காக்கள் அமைத்து, ஆன்மிக சுற்றுலாத்தலமாக்க வேண்டும்.

ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் மற்றும் பிற அலுவலகங்களில், அலுவலக உதவியாளர்கள், இரவு காவலர்கள், பதி வறை எழுத்தர்கள், ஈப்பு ஓட்டுநர்கள் உள்ளிட்ட காலிப் பணியிடங்களை நிரப்பிட வேண்டும்.

**கால்நடை கிளை மருந்தகம்!**

புதுச்சத்திரம் கால்நடை மருத்துவமனையை தரம் உயர்த்தி தர வேண்டும். நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் ஒன்றியம், பொட்டணம் ஊராட்சியில் கால்நடை கிளை மருந்தகம் அமைக்க வேண்டும். புதுச்சத்திரம் ஒன்றியம், கதிராநல்லூர் ஊராட்சியில் புதியதாக கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டும். மோகனூர் கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாக தரமுயர்த்த வேண்டும்.

மோகனூர் காந்தமலை முருகன் கோயிலுக்கு சொந்தமான இடத்தில் திருமண மண்டபம் அமைக்க வேண்டும். மோகனூர் அருள்மிகு அசலதீபேஸ்வரர் கோயிலுக்கு ராஜ கோபுரம் அமைத்து, குடமுழுக்கு நடத்த ஆவன செய்ய வேண்டும்.

நாமக்கல், அருள்மிகு பலபட்டறை மாரியம்மன் கோயிலுக்கு உபகோயிலான அருள்மிகு செல்லாண்டியம்மன் திருக்கோயில் மற்றும் அருள்மிகு முனியப்பன் கோயில் ஆகிய கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

மோகனூர் வட்டம், ஆண்டாபுரம், சிவன்கோயில் மற்றும் பெருமாள் கோயில்களை புனரமைத்து, குடமுழுக்கு நடத்த ஆவன செய்ய வேண்டும்.

கீரம்பூர் அல்லது தும்மங்குறிச்சி ஏதேனும் ஒரு பகுதியில் துணை வேளாண்மை விரிவாக்க மையம் அமைக்க வேண்டும்.

இவ்வாறு பெ.இராம லிங்கம் பேசினார்.

---

## முதல்வர் முகாம் அலுவலகத்தில் பணியாற்றும்

# டி.ஆர்.மோகனாநத்தன் தாயார் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச் 29 -

முதல்வர் முகாம் அலுவலகத்தில் பணியாற்றும் டி.ஆர். மோகனா நத்தனின் தாயார் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது இரங்கல் செய்தி வருமாறு:

முதலமைச்சர் முகாம் அலுவலகத்தில் பணியாற்றும் டி.ஆர்.மோகனாநத்தன் (மோகன்) அவர்களின் தாயாரும், மறைந்த டி.எஸ். ராமசாமி அவர்களின் துணைவியாருமான திருமதி என்.எஸ். சாவித்திரி அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

அன்புத் தாயாரை இழந்து வாடும் டி.ஆர்.மோகனாநத்தன் அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

---

## தஞ்சை வடக்கு மாவட்டத்தில்

# அரசுக்குச் சொந்தமான இடங்களில் உள்ள கழக கொடிக் கம்பங்களை அகற்றிடுவீர்!

## மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை!

தஞ்சாவூர், மார்ச் 29 -

தலைமைக் கழக அறிவிப்பின்படி தஞ்சை வடக்கு மாவட்டத்தில் அரசுக்குச் சொந்தமான இடங்களில் உள்ள கழக கொடி கம்பங்களை அகற்றிட கழக நிர்வாகிகளுக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :



தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை மற்றும் உள்ளாட்சி துறைக்கு சொந்தமான இடங்களில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கட்சிகள், இயக்கங்களின் கொடிகம்பங்களையும் அகற்றிட வேண்டுமென சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டுள்ளதை தொடர்ந்து தலைமைக் கழக அறிவிப்பின்படி தஞ்சாவூர் வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநகர, ஒன்றிய, பேரூர், வார்டு, கிளை கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள், தத்தமது பகுதிகளில் உள்ள தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை மற்றும் உள்ளாட்சி துறைக்கு சொந்தமான இடங்களிலும் பொது இடங்களிலும் வைத்துள்ள நமது கழகக் கொடிக் கம்பங்களை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை அளித்த தீர்ப்பினை ஏற்று அகற்றிட வேண்டும். அவ்வாறு அகற்றப்பட்ட நமது கழகக் கொடி கம்பங்களின் விவரங்கள் அடங்கிய பட்டியலை மாவட்டக் கழகத்திற்கு தெரியபடுத்த வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி அறிக்கை வெளியிட்டுள்ளார்.



நாகை மாவட்டம் கீழையூர் கிழக்கு ஒன்றியம் திருப்பூண்டி புதிய ஜும்ஆபள்ளிவாசல் வளாகத்தில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் இப்தார் நோம்பு திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந் நிகழ்ச்சியில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் பேசினார். உடன் கீழையூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரியசார்லஸ், மாவட்ட பிரதிநிதி மு.ப.ஞானசேகரன், மாவட்ட சிறுபான்மை அணி துணை அமைப்பாளர் முகமதுரபீக் மற்றும் பலர் உள்ளனர்.



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி மேற்கு ஒன்றியம் எடக்குடிவடபாதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அ.தி.மு.க., உள்ளிட்ட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 72 குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அக் கட்சிகளில் இருந்து விலகி மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் சீர்காழி மேற்கு ஒன்றியச் செயலாளர் ஏ.ஜி.ஜெ.பிரபாகர், மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், பொருளாளர் மகா.அலெக்சாண்டர், பொதுக்குழு உறுப்பினர்கள் வைத்தீஸ்வரன்கோயில் எஸ். சுவாமிநாதன், எம்.பி.கென்னடி, மாவட்ட இளைஞர் அணி துணைஅமைப்பாளர் ஜெ.ஜுபையர்அகமது, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் முருகன், முன்னாள் ஒன்றியக் குழு தலைவர் தியாக.விஜயேஸ்வரன் மற்றும் பலர் உள்ளனர்.